# அறிவித்தல்

## கற்றல் சாதனங்களை எழுதுவதற்காக எழுத்தாளர்களை ஆட்சேர்த்தல்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் கற்றல் சாதனங்களை எழுதுவதற்காக தகுதியுள்ள எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (இணைப்பு -1)

பாடசாலைக் கலைத்திட்டத்திற்கு அமைவான பாடத்துறைகளில் தேர்ச்சியுள்ள, எழுத்தாற்றல் மற்றும் அனுபவம்கொண்ட பின்வரும் துறைகளில் தற்போது கடமையாற்றும் அல்லது கடமையாற்றிய நபர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

- பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்
- கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள்
- பாடத் துறைசார் நிபுணர்கள் / தொழில்சார் வல்லுநர்கள் (வைத்தியர்கள், பொறியியலாளரகள், தொழினுட்பவியலாளர் போன்றோர்)
- ஆசிரிய கல்வியியலாளர்கள்
- ஆசிரிய ஆலோசகர்கள்
- ஆசிரியர் சேவையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவத்துடன், பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பூர்த்தி செய்த பட்டதாரி ஆசிரியர்கள் அல்லது
- 08 வருடங்களுக்கு மேற்பட்ட கற்பித்தல் அனுபவத்தைக்கொண்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அல்லது கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரி ஆசிரியர்கள்
- பாடத்துறையில் தேர்ச்சி பெற்ற விருது பெற்ற எழுத்தாளர்கள்

இதனுடன் முன்வைக்கப்பட்டுள்ள "Application Form for Resource Persons for Writing Learning Materials" என்ற விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி 2026.05.31 ஆம் திகதிக்கு முன்னர் epddevelopmentbranch@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது "கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தபாலில் விண்ணப்பங்களை அனுப்பும்போது, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "எழுத்தாளர்களை ஆட்சேர்த்தல் - (விண்ணப்பிக்கும் பாடம்)" எனக் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
2026.04.29